# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1966-2016 GOLDEN JUBILEE

REACHING NATIONS

**India's National Spiritual Newspaper**

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

**Vol. XXIX** YEAR OF OUR LORD JESUS CHRIST, 2024 AUGUST **No. 08**


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் ~ 85:1-9

1. கர்த்தாவே, உமது தேசத்தின்மேல் பிரியம் வைத்து, யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பினீர்.
2. உமது ஜனத்தின் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவத்தையெல்லாம் மூடினீர். (சேலா.)
3. உமது உக்கிரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, உமது கோபத்தின் எரிச்சலைவிட்டுத் திரும்பினீர்.
4. எங்கள் இரட்சிப்பின் தேவனே, நீர் எங்களைத் திருப்பிக்கொண்டு வாரும், எங்கள்மேலுள்ள உமது கோபத்தை ஆறப்பண்ணும்.
5. என்றைக்கும் எங்கள்மேல் கோபமாயிருப்பீரோ? தலைமுறை தலைமுறையாக உமது கோபத்தை நீடித்திருக்கப் பண்ணுவீரோ?
6. உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?
7. கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து, உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச் செய்யும்.
8. கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்; அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்; அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக.
9. நம்முடைய தேசத்தில் மகிமை வாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது.

# தடைகளை உடைத்தெறிகிற கர்த்தர் – பாகால் பிராசீம்

(2 சாமுவேல் 5:20)


*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி,
*Hon. Editor-in-Chief*




கர்த்தருக்குள் பிரியமான **அழைப்பின் எதிரொலி** குடும்பத்தாருக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் எனது ஆசீர்வாதங்கள். தொடர்ந்து நமது பத்திரிகையின் வாயிலாக உங்களோடு ஒவ்வொரு மாதமும் தேவ வார்த்தையோடு இணைவது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தேவன் தந்த இந்த மிகப்பெரிய கிருபைக்காக நன்றி செலுத்துகிறேன். இந்த வார்த்தைகள் இங்கு சொல்லப்படும் செய்திகள் நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு நிச்சயமாகவே பிரயோஜனமாக இருக்கும் என்று சொல்லி விசுவாசிக்கின்றேன். ஆண்டவர் உலகத்தை படைக்கும்போது அதற்கென்று சொல்லி காலத்தையும் சமயத்தையும் உண்டாக்கி இருக்கிறார் என்று சொல்லி பிரசங்கியில் சாலமோன் ராஜா சொல்லியிருக்கிறார்.

கடந்த சில மாதங்களாக நாம் கோடைக்காலத்தின் தாக்கத்திலிருந்து குளிர்காலத்திற்குள்ளாக கடந்து சென்று கொண்டிருக்கிறோம். கோடைகாலத்திற்கென்று, குளிர்காலத்திற்கென்று, ஒவ்வொன்றிற்கும் ஒரு அழகு உண்டு, அதைத்தான் வேதம் சொல்கிறது. தேவன் அதினதன் காலத்தில் நேர்த்தியாய் செய்கிற தேவனாம் (பிரசங்கி 3:11). நம்முடைய வாழ்க்கையிலும் தேவன் கிரியை செய்வதற்கும், தேவனுடைய சித்தம் நம் வாழ்வில் நிறைவேறுவதற்கும் தேவன் காலத்தை வைத்திருக்கிறாராம். ஒரு வேளை நமது பத்திரிகையை வாசித்துக் கொண்டிருக்கிற நீங்கள் எந்த காலக்கட்டத்திற்குள்ளாக, எந்த சூழலிற்குள்ளாக இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. எந்த காலக்கட்டமாக இருந்தாலும், எந்த சூழ்நிலையாக வந்தாலும் ஒன்றை மாத்திரம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தேவனின் கிருபை மாத்திரமே போதுமானது. எல்லா சூழ்நிலையையும் நாம் கடந்து செல்ல

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....




அழைப்பின் எதிரொலி!

**கிறிஸ்தவ யூடியூப் சானல்!**

*போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்*

*நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!*

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)




## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...

**என் ஜெபத்தைத் தள்ளாமலும், தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. ~ சங்கீதம் 66:20**




**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

**HON. EDITOR-IN-CHIEF**
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**HON. MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.

**ADMINISTRATION**
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Sis. L. Mariya Anjalin, M.A., M.Sc., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran



**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers



10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858

**E.MAIL**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call


எனக்கு மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே,

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், **அழைப்பின் எதிரொலி** தலைமையகத்திலிருந்து உங்களுக்கும் உங்களுக்கு அன்பானவர்களுக்கும் எங்கள் அன்பான வாழ்த்துக்கள்.

நீங்கள் எங்களுக்கு எவ்வளவு விசேஷித்தவர்கள் என்று நாங்கள் வெளிப்படுத்த விரும்புகிறோம். **அழைப்பின் எதிரொலி** ஸ்தாபிக்கப்பட்ட 1969 ஆம் வருடத்திலிருந்தே நீங்களும் உங்கள் பெற்றோர்கள் மற்றும் பெற்றோர்களின் பெற்றோர்கள் ஆகியோர் உங்களது ஆவிக்குரிய பிரயாணத்தை எங்களுடன் தொடங்கி, கடந்த காலம் முதல் இன்று வரை எங்களுடன் பிரயாணித்துக் கொண்டிருக்கிறீர்கள். கர்த்தருடைய கிருபை அந்த காலமெல்லாம் நம்மோடு இருந்ததை எண்ணும்போது எங்களுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது.

ஆகஸ்ட் 10 ஆம் தேதி அன்று **அழைப்பின் எதிரொலி**யின் பலவிதமான ஊழியங்கள் 56 ஆவது வருடத்திற்குள்ளாய் நுழைய இருக்கிறது. இந்த 55 வருடங்களிலும் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் ஜெயத்தையும், உண்மையையும் உங்களோடு இணைந்து கொண்டாட இருக்கிறோம். தேவனுக்கும் மனித பார்வைக்கும் முன்பாக நாங்கள் சிறுமையானவர்களாகக் கருதப்பட்டிருந்தாலும், எங்கள்மேல் அசைக்க முடியாத இரக்கத்தைக் காண்பித்த உங்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் ஜெபங்கள், உங்கள் பங்களிப்புகள் மற்றும் உங்கள் ஆதரவு எங்களுக்கு மிகப்பெரிய பெலனாயுள்ளது. தேவன் வானத்தின் பலகணிகளைத் திறந்து அளவில்லாமல் உங்களை ஆசீர்வதிப்பாராக என்று நான் உண்மையாக உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

கர்த்தருக்கு சித்தமானால், ஆகஸ்ட் 9 முதல் 11 வரை 56ஆவது வருடாந்தர சுவிசேஷக் கூட்டத்தை எளிமையான முறையில் நடத்த விரும்புகிறோம். இந்நாட்களில் நமது தலைமை சபையில், சுவிசேஷக் கூட்டங்கள், வாலிபர் நிகழ்ச்சிகள், சிறுவர் நிகழ்ச்சிகள் போன்றவை நடைபெறும். அந்நாட்களில் சென்னையில் இருப்பீர்களானால், இவற்றில் பங்குபெற அன்புடன் உங்களை அழைக்கிறோம்.

ஆடம்பரமான கொண்டாட்டங்களைச் செய்வதற்கு ஏற்ற நிதி நம்மிடம் இல்லையென்றாலும், நம்மிடம் இருப்பவற்றை வைத்து, உண்மையுள்ள நமது எஜமானாகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையைக் குறித்து அர்ப்பணிப்போடு பிரசங்கிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

கடந்த ஜூன் 28 முதல் 30 வரை, வடஇந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தின் டும்டா (Dumda), அகிர்பாடா (Akirpada) என்ற குக்கிராமங்களுக்கு நாங்கள் பிரயாணித்து, எங்களது மிஷன் மையங்களுக்கு சந்திக்கும் ஊழியத்தை துவக்கியுள்ளோம். அவ்வாறு இன்னும் பல மையங்களுக்குச் செல்ல இருக்கிறோம். இந்தியாவிற்குள்ளும், வெளிநாடுகளிலும் அவ்வாறு பிரயாணப்பட உள்ளோம். எங்கள் முயற்சிகளை உங்கள் ஜெபங்களால் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

கர்த்தருடைய கிருபையினால், சுவிசேஷத்தை பரவச் செய்து, தலைவர்களைத் தாங்கி, நாங்கள் போகும் இடமெல்லாம் சபைகளை ஸ்தாபித்து, நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மகிமைக்காக ஊழியம் செய்துகொண்டே இருக்கிறோம்.

பலவிதமான சோதனைகளும், போராட்டங்களும் எங்கள் குடும்பங்களில் காணப்பட்டாலும், உங்களின் உறுதியான உதவிகள் எங்களைத் தாங்குகிறது. அதற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம். உங்களோடு கை கோர்த்துக்கொண்டு முன்னேறிச் செல்கிறோம். எங்களை உங்கள் சிந்தையில் எப்போதும் வைத்து, தேவன் உங்களை ஏவும்படி செய்யுங்கள். நாங்களும் உங்களை எங்கள் இருதயத்தில் வைத்து உங்களுக்காக ஜெபங்களை ஏறெடுக்கிறோம். அன்போடும் ஜெபத்தோடும் உங்களை வாழ்த்துகிறோம்.

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,**

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

(+91) 98410 71858 / 98412 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ☼ BIBLECOR - Postal Courses (3 languages) ☼ YouTube Ministry ☼ Online Courses ☼ Theological Correspondence Courses (2 languages) ☼ Church Planting ☼ Nehemiah Bible Colleges ☼ Gospel Printing Press ☼ Great Commission Partners ☼ St. Paul's Matriculation School ☼ Crusades ☼ Community Development

## உங்கள் கவனத்திற்கு!

*நமது அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் Echo of His Call YouTube சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட (Personal) இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1–ம் பக்கத் தொடர்ச்சி

ஒன்றே ஒன்று தேவை. அது தேவனுடைய வாக்குத்தத்தங்கள். அநேக நேரங்களில் தேவனுடைய வாக்குத்தத்தங்களை அறிந்த, மனப்பாடம் செய்த மக்களாக கூட நாம் இருக்கலாம். ஆனால் வார்த்தையை அப்பியாசப்படுத்த அல்லது அதை நடைமுறைப்படுத்த நாம் தவறிவிட்டால் அதனால் எந்த பிரயோஜனமும் இல்லாமல் போய்விடுகிறது. தேவன்தாமே நமது வாழ்க்கையில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை, நமது பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை சபையில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களை ஒவ்வொரு நாளும் சொல்லி, அதை ஆம் என்றும் ஆமென் என்றும் வாழ்க்கையில் ஆக்குகின்ற மக்களாய் காணப்படுவோம்.

தேவனது வாக்குத்தத்தங்கள் நாம் வாழ்வில் வெளிப்படையாக நிறைவேற பல வாரங்கள், மாதங்கள், வருடங்கள் ஆகலாம். சாமுவேல் தீர்க்கதரிசி தாவீதை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகித்த பின், அந்த தீர்க்கதரிசனம் நிறைவேற தாவீது 15இலிருந்து 20 வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. தேவன் அவசரப்படவும் மாட்டார்; தாமதிக்கவும் மாட்டார். அவரது சரியான நேரத்தில் சரியாகக் கிரியை செய்வார். தாவீது இதை அறிந்திருந்தார். எனவேதான் அவர் தமது சங்கீதங்களில் கர்த்தருக்குக் காத்திருப்பதைக் குறித்து எழுதி இருக்கிறார். இந்த கருப்பொருளை அநேக சங்கீதங்களிலே வாசிக்கலாம். தேவனது பண்புகளைத் தாவீது எழுதியுள்ளதுபோல வேறு எங்கும் வேதாகமத்தில் காண முடியாது; ஜெபத்தைக் கேட்கிற ஆண்டவர், நமது கண்ணீரைத் துருத்தியில் சேமித்து வைக்கிறவர், மேய்ப்பனானவர், அடைக்கலம், பாதுகாவலர், வழிநடத்துபவர், நண்பர், தாய், தகப்பன், துணையாளர், கற்பாறை, நிழல். இந்த பெயர்கள் அனைத்தையும் தாவீது தனது வாழ்க்கையில் தானே அனுபவித்திருந்தார். என் உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டிருக்கும் ஒரு பெயர்தான் பாகால் பிராசீம். 2 சாமுவேல் 5:20இல் இவ்வார்த்தை இருக்கிறது. தடைகளைத் தகர்த்தெறியும் தேவன் என்பது அதன் பொருள். எவ்வாறு தண்ணீர் பொத்துக்கொண்டு வெளியேறி, வழியிலே காணப்படும் தடைகளையெல்லாம் உடைத்தெறிந்து பாயுமோ அவ்வாறே தேவன் தடைகளை உடைத்து, பெரிய திருப்பங்களை நம் வாழ்வில் நிகழச் செய்வார். இது ஒரு வல்லமையுள்ள பெயர்.

தனிப்பட்ட நபர்களுக்கு, வியாபாரங்களுக்கு, வீடுகளுக்கு மக்கள் ஏதோ ஒரு தரிசனத்துடன் பெயர் வைக்கும் பழக்கத்திற்கு ஒரு முக்கிய பொருளும், வல்லமையும் இருக்கிறது. பெயர் சூட்டும்பொழுது, தேவன் ஞானத்துடன் செய்வது நல்லது. ஏனென்றால், பெயர்கள்மேல் ஒரு விசேஷ அபிஷேகம் உண்டு. வேதாகமத்திலும், பெயர்களுக்கு ஆழமான அர்த்தங்கள் உண்டு.

## ரெப்பாயீம் பள்ளத்தாக்கு !

'பாகால் பிராசீம்' என்ற பெயரின் பின்னணியை உங்களுக்கு விளக்க விரும்புகிறேன்.

இஸ்ரவேலின் ராஜாவாக தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டதை 2 சாமுவேல் 5ஆம் அதிகாரத்தில் வாசிக்கலாம். இது அவன் வாழ்க்கையில் ஒரு முக்கியமான காலமாக இருந்தது. "நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம் போல் இருக்கும் (நீதிமொழிகள் 13:12)" என்பது போன்ற தேவ நன்மையை தாவீது அனுபவித்த போதிலும், தாவீதுக்கு சவால்கள் உடனேயே வந்தது. வேதத்தில் பிசாசைப் பொய்யனும், கெர்ச்சிக்கிற சிங்கமுமாய்ச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அவன் தாவீதின் சமாதானம், சந்தோஷம், மகிழ்ச்சி ஆகியவற்றைக் கெடுக்கப் பார்த்தான். தாவீதின் மேல் பொழியப்பட்ட ஆசீர்வாதங்களை மட்டுப்படுத்த பிசாசு நோக்கமாயிருந்தான்.

தாவீது இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டதை அறிந்த பெலிஸ்தியர், இராட்சதர்கள் உலாவி வந்த ரெப்பாயீம் பள்ளத்தாக்கில் யுத்தத்திற்கு ஆயத்தமானார்கள்.

## 1. தேவதிட்டத்தின் நடுவில் ஒருவர் இருக்கும்போது சாத்தானின் கவனம் அவர்மேல் இருக்கும்!

எதிரிகளின் இந்த போர்த்தந்திரம், தேவபிள்ளைகள், தேவ சித்தத்திற்கு ஏற்ற வாழ்க்கை வாழும் போது சந்திக்க நேரிடுவதாகும். வரவிருக்கும் ஆபத்தைத் தாவீது அறிந்து, யுத்தத்திற்குப் போவதற்கு முன் தேவனிடத்தில் ஆலோசனை பெற்றான். அவன் எவ்வாறு தேவ திட்டத்தைச் சார்ந்து இருந்தான் என்பதை இது காட்டுகிறது.

பிசாசாகிய எதிரியினால் சூழப்பட்டு, வலையில் அகப்பட்டதுபோல காணப்பட்டாலும், விசுவாசிகளாகிய நாம், சேனைகளின் கர்த்தராகிய தேவன், எங்கும் நிறைந்தவராய் நம்மோடு இருக்கிறார் என்பதை மறந்துபோகக் கூடாது. எதிரியின் கோட்டையாக இருந்த ரெப்பாயீம் பள்ளத்தாக்கு, தேவன் அங்கே தலையிட்டதால், தண்ணீர் உடைத்தோடுகிறதுபோல, தாவீதின் எதிரிகள் சிதறி ஓடினார்கள். தடைகளை உடைத்தெறிந்து வெற்றி சிறந்த தேவனாக, பாகால் பிராசீமாக அவர் வெளிப்பட்டு, தோல்வி போல் தோன்றும் சூழ்நிலைகளை மகா பெரிய வெற்றிகளாக மாற்றுபவராக நம் தேவன் திகழ்கிறார்.

அன்பான நண்பர்களே! நீங்கள் எங்கு இருந்தாலும் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும், நீங்கள் உற்சாகமாய், தைரியமாய், உறுதியாய் இருக்கும்படி உங்களை ஊக்குவிக்கிறேன். ஏனென்றால், நாம் சேவிக்கும் தேவன் தடைகளை உடைத்தெறிந்து வெற்றி சிறப்பவர்! அவர் நம் முன்பாக சென்று நம் எதிரிகளைத் தோற்கடிப்பவர். தண்ணீர் எவ்வாறு தடைகளையெல்லாம் பெயர்த்துக் கொண்டு ஓடுமோ அவ்வாறு பெலிஸ்தர் மேல் தாவீதுக்கு பெரிய வெற்றியை தேவன் கொடுத்தார். எனவேதான் தாவீது அந்த இடத்திற்கு, 'தடைகளை உடைத்தெறியும்' என்று பெயரிட்டான். என் நண்பர்களே, இப்பொழுது நீங்கள் இருப்பதும் 'தடைகளை உடைத்தெறியும்' இடம்தான்! ஜெபியுங்கள், வெற்றியை சொந்தமாக்க ஜெபியுங்கள், அறிக்கை செய்யுங்கள், தைரியமாய் நம்பிக்கையுடன் இவ்வாறு அறிவியுங்கள்: "தடைகளை உடைத்தெறியும் என் காலம் இது. 'பாகால் பிராசீம்' என்னை முன் சென்று நடத்துவார்". எனக்கெதிராகவும், என் குடும்பத்திற்கெதிராகவும், என் திருமண வாழ்க்கைக்கு எதிராகவும், என் தொழிலுக்கு விரோத மாகவும், என் பிள்ளைகள், என் ஊழியம் போன்ற அனைத்துக்கும் எதிராகவும் உருவாக்கப்படும் ஆயுதம் அனைத்துக்கும் எதிராக தேவன் போராடி அவற்றை அழிப்பார். அவரே, 'பாகால் பிராசீம்'. அசையாத விசுவாசத்துடன் சத்தமாக அவ்வாறு கூறுங்கள். இப்பொழுது நீங்கள் இருக்கும் சூழ்நிலையைப்

பார்க்காதீர்கள்; தேவனின் திட்டத்தில் நம்பிக்கை வையுங்கள். எரிகோ கோட்டையை ஏழு நாட்கள் சுற்றச் சொன்னபோது இஸ்ரவேலருக்கு அர்த்தமற்றதாய்த் தோன்றியது. நாம் நமது சொந்த புத்தியின்மேல் நம்பிக்கை வைக்கக் கூடாது. மோசே தன் கையிலிருக்கும் கோலினால் இஸ்ரவேலரை தேவன் விடுவிக்க முடியுமா என்று மோசே சிந்தித்திருக்கலாம். 'பாகால் பிராசீமாக' தேவன் இருந்து, நம் முன்பாக கடந்து சென்று நமது எதிரிகளை தேவன் முறியடிப்பார் என்று விசுவாசக் கண்களால் பாருங்கள். ஆமென்!

## 2. எதிரியானவன் மறைந்திருந்து தாக்கும்போது, தேவ சமூகத்திற்குச் செல்லுங்கள்:

மறைவான தாக்குதலை சந்திக்கும் போதும், பாவத்தின் பிடியில் அடிக்கடி சிக்கும் நிலையிலும், முன்னேற்றமில்லாமல் இருக்கும் சூழ்நிலைகளிலும் கர்த்தர் தடைகளைத் தகர்த்தெறிய தேவ சமூகத்தை நாட வேண்டும். எதிரிகளால் தான் சூழப்பட்டிருக்கிறதை தாவீது உணர்ந்த போது, தேவனிடத்திலே வழிநடத்துதலைப் பெற அவரிடம் சென்றான். நாம் முதன்முதலாய் தேவனிடத்தில் நம் பிரச்சனைகளைக் கொண்டு செல்கிறோமா? தாழ்மையுடன், கேட்டு, தேடி, அவரது கதவுகளைத் தட்டி அவரது சமூகத்தை நாட வேண்டும். உங்களது சொந்த கிரியைகளை சற்றே நிறுத்தி, தேவனது கோட்டைக்குள் அடைக்கலம் புகுந்து, ஊக்கமாய் ஜெபியுங்கள். கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்.

தான் எதிரிகளால் சூழப்படும் போது, தாவீது தேவ ஆலோசனைக்காக அவரிடம் சென்று, தாழ்மையுடன் முழங்கால்படியிட்டு தேவன் தலையிடும்படி காத்திருந்து ஜெபித்தான். 2 சாமுவேல் 5:19 இல் தேவன் அவனுக்கு பதிலளித்தார். நமது ஜெபங்களைக் கேட்டு பதிலளிக்கும் தேவனைத்தான் நாம் ஆராதிக்கிறோம். அவரை உண்மையுடன் நாம் அணுக வேண்டும். கர்த்தர் தடைகளை உடைத்தெறிய வேண்டுமானால், நமது சிந்தை சிதறாமல், அவரது பதிலிலேயே நோக்கமாயிருந்து, எந்த சந்தேகமுமில்லாமல், விசுவாசத்தோடு அவரது ஆலோசனையைத் தொடர்ந்து நாடி, அவரது பதிலைத் தெளிவாய்ப் பெறும்வரை காத்திருக்க வேண்டும். நமது பிரச்சனை பெரியதாயிருக்குமானால், நமது ஜெபங்களும் அவ்வாறே ஊக்கமானதாய் இருக்க வேண்டும். விசுவாச மக்களின் ஐக்கியத்தை இக்காலங்களில் பெலப்படுத்திக் கொள்வதும் முக்கியமானதாகும்.

## 3. ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலிருந்து பாகால் பிராசீமுக்குச் செல்லுதல் – மாற்றத்தின் நிகழ்வு:

தாவீதை முறியடிக்க, அவனுக்குத் தீங்கு விளைவிக்க ரெப்பாயீம் பள்ளத்தாக்கில் பெலிஸ்தியர் பதுங்கியிருந்தனர். சாத்தான் ஒருவரைத் தடைசெய்து, அவருக்கு வேதனை கொடுத்து, அவரது வாழ்க்கையில் தேவ சித்தம் நிறைவேறாமல் இருக்க அவருக்கு தடைகளைக் கொண்டு வந்து, அவருடைய பிள்ளைகளையும், அவர்களது அழைப்பையும் தடை செய்ய முற்படுவதற்கு அடையாளமாகத்தான் ரெப்பாயீம் பள்ளத்தாக்கு கருதப்படுகிறது. சிலர் இத்தகைய தோல்வி, கலக்கம் போன்ற பள்ளத்தாக்கின் அனுபவத்தில் இருக்கும்போது, அந்த இடத்திலேயே அவர்களது எதிராளிகள் பயத்தினால் ஓடி மறைந்து போவார்கள். சிங்கங்களைப்போல உறுமி அச்சுறுத்திக் கொண்டிருக்கும் அதே இடத்திலேயே வியத்தகும் வெற்றியை தேவன் அருளி, தலைகீழாக மாற்றப்பட்ட ஒரு ஜெயத்தை அவர் தந்தருளுவார்.

### பாகால் பிராசீம்!

தாவீது பெலிஸ்தியரை முறியடிக்க தேவன் அனுமதித்திருந்தார். பெலிஸ்தியரின் பெலனை தேவன் தலையிட்டு, அவர்களை முறியடித்தார். அந்த இடத்திற்கு பாகால் பிராசீம் என்று தாவீது பெயரிட்டான். எதிரிகளின் கோட்டைகளை தேவ வல்லமை மேற்கொண்டதற்கு இந்த இடம் சாட்சியாக இருக்கிறது. பிசாசு எந்த இடத்தில் உறுதியான நிலையில் இருக்கிறான் என்று நாம் நினைக்கிறோமோ, அங்கேயே ஒரு மகாபெரிய வெற்றியை அளிக்க தேவன் விரும்புகிறார். தேவன் நமக்காக, நம் பின்னணியில் செய்கிற கிரியைகளை நாம் அறியாததினால், நமது வாழ்வில் தேவன் வைத்திருக்கும் திட்டங்களை முழுமையாக நாம் அறிந்துகொள்ள தவறிவிடுகிறோம். நமது வாழ்வின் மிகப்பெரிய சவால்களைச் சந்திக்கும் யுத்த களங்களிலேயே, நம் தேவனது உண்மையில் நம்பிக்கை வைத்திருப்போமானால், மிகப்பெரிய வெற்றிகளை காண தேவன் நம்மை நடத்துவார்.

இஸ்ரவேலின் சேனையை தேவ தூதர்களின் சேனைகள் முன்நின்று நடத்தியதுபோல, நீங்கள் வெகுகாலம் ஆவலாய் எதிர்நோக்கியிருந்த வெற்றிகளுக்காக தேவன் துரிதமாக உங்கள் வாழ்வில் கிரியை செய்து வருகிறார். இந்த சத்தியம் மிகவும் முக்கியமானது. அநேக நேரங்களில், அவர் நம் வாழ்வில் அமைதியாகப் பல காரியங்களை இணைத்து செயல்பட்டு வருவதை அறியாமல், அவர் நம் மத்தியில் இல்லை என்று எண்ணி, கைவிடப்பட்ட நிலையில் நாம் தவித்துக் கொண்டிருக்கலாம்.

கர்த்தருக்குள் மிகவும் அன்பான சகோதர, சகோதரிகளே! இன்று இதை தைரியமாக அறிக்கை செய்யுங்கள்: இந்த நேரமே எனது மகா பெரிய வெற்றியின் நேரம். இன்று முதல் நான் வெற்றிகளைத் தொடர்ந்து காண்பேன். ரெப்பாயீம் பள்ளத்தாக்கை

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி

சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை

போதனா மொழி : தமிழ்

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.

Diploma in Theology

கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்

உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்



## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2024 ஆகஸ்ட் 19 முதல் செப்டம்பர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஆகஸ்டு 19 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரியின்** ஆசிரியர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்டு 20 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்டு 21 ⇨ அர்ப்பணிப்புடன் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு ஆதரவளித்து வரும் இணை ஆசிரியர்கள் கொண்ட நமது ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்டு 22 ⇨ ஒருமித்த கருத்துடன் அர்ப்பணிப்புடன் பணி செய்யும் பணியாளர்களைக் கொடுத்த கிருபைக்காக ...

ஆகஸ்டு 23 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அச்சகப் பணி சம்பந்தமானவைகளை வெளியில் இருந்து தகுந்த நேரத்தில் செய்து கொடுக்கும் பணியாளர்களை ஆசீர்வதித்த கிருபைக்காக ...

ஆகஸ்டு 24 ⇨ தார்மீக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் எங்களுக்கு உதவி வரும் பங்காளர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்டு 25 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** முதல்வர், பணியாளர்கள் மற்றும் மாணவர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்டு 26 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரி** மற்றும் **அஞ்சல் வழிக் கல்விமுறைகளைக்** கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

ஆகஸ்டு 27 ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக ...

ஆகஸ்டு 28 ⇨ ஆகஸ்ட் 10–ம் தேதியன்று 56–வது வருடத்திற்குள் அடியெடுத்து வைத்த பத்திரிகை ஊழியத்தினை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்டு 29 ⇨ நமது தலைமைப் போதகர் அவர்களையும், அவரது குடும்பத்தினரையும் எல்லாவித தீயசக்திகளிலிருந்தும் விலக்கிக் காத்துக் கொண்டதற்காக ...

ஆகஸ்டு 30 ⇨ குஜராத், சூரத்–ல் உள்ள மிஷன் மையங்களுக்கு போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் மற்றும் குழுவினர் சென்றதற்காக ...

ஆகஸ்டு 31 ⇨ நமது கடந்த மாதத் தேவைகளை தேவன் சந்தித்ததற்காக ...

செப்டம்பர் 01 ⇨ நமது சபைகளுக்கு புது அங்கத்தினர்களை கொடுத்தற்காக ...

செப்டம்பர் 02 ⇨ நமது **St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு** புதிய மாணவர் சேர்க்கைக்காக ...

செப்டம்பர் 03 ⇨ நமது அனைத்து பணியாளர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் பாதுகாத்துவரும் கிருபைக்காக ..

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

செப்டம்பர் 04 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் நமது பன்மொழி ஊழியங்களில் புதிய தரிசனங்களுடன் செயல்படவும் ஆசீர்வதிக்கப்படவும் வேண்டி ...

செப்டம்பர் 05 ⇨ **அழைப்பின் எதிரொலியின்** தலைமைச் சபை மற்றும் கிளைச்சபையின் விசுவாசிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலனுக்காக ...

செப்டம்பர் 06 ⇨ எல்லா கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...

செப்டம்பர் 07 ⇨ நமது ஊழிய விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும் ...

செப்டம்பர் 08 ⇨ கிறிஸ்தவ போதகர்கள் கள்ள உபதேசம் செய்யாமல் வேதாகம முறைப்படி பிரசங்கிக்க ...

செப்டம்பர் 09 ⇨ உலக தேசங்கள் அனைத்தும் ஒற்றுமையாகவும் மற்றும் அமைதியாகவும் வாழ்ந்திட ...

செப்டம்பர் 10 ⇨ நமது அச்சக பணியாளர்கள், வாகன ஓட்டுனர்கள், கணினி ஆப்ரேட்டர்கள் போன்ற தொழில்நுட்ப பணியாளர்களுக்காக ...

செப்டம்பர் 11 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க ...

செப்டம்பர் 12 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் வளர்ச்சிக்காக மற்றும் விரிவாக்கத்திற்காக ...

செப்டம்பர் 13 ⇨ இந்தியாவில் சுவிசேஷம் செல்லாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்று ஜனங்கள் இரட்சிக்கப்பட ...

செப்டம்பர் 14 ⇨ உலக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக ...

செப்டம்பர் 15 ⇨ மது அருந்தும் பழக்கம் உடையோர் மற்றும் தீயபழக்கம் கொண்டோர் மனந்திரும்ப ...

செப்டம்பர் 16 ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி**களுக்கு மேலும் கூடுதலாக மாணவர்கள் வந்து சேரவேண்டி ...

செப்டம்பர் 17 ⇨ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காகவும் ...

செப்டம்பர் 18 ⇨ இம்மாதத்திற்கான நம் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட வேண்டி ...

... 4–ம் பக்கத் தொடர்ச்சி

தாவீதுக்காக பாகால் பிராசீமாக தேவன் மாற்றியதுபோல, இன்று நம் ஒவ்வொருவருக்கும் தேவன் செய்ய ஆயத்தமாயிருக்கிறார்.

2 சாமுவேல் 5:21 இல், அந்த பெலிஸ்தர் தங்கள் விக்கிரகங்களை விட்டு விட்டு ஓடினார்கள் என்றும் தாவீதும் அவனது மனுஷரும் அவற்றைச் சுட்டெரித்தார்கள் என்றும் பார்க்கலாம்.

தேவன் உங்கள் முன்பாகச் சென்று, உங்கள் போராட்டங்களின் பள்ளத்தாக்குகளை, உங்களின் அளவற்ற ஆசீர்வாதங்களின் இடங்களாக மாற்றி, உங்கள் சத்துருக்கள் விட்டுச் சென்ற அனைத்தையும் சுட்டெரித்து அழிக்க தேவன் உங்களுக்கு அருள் செய்வாராக என்று வேண்டிக் கொள்கிறேன். இடைவிடாமல் உங்கள் எதிரிகள் உங்களைத் தாக்கிக் கொண்டிருப்பதுபோல நீங்கள் உணரும்போது, தைரியமாயிருங்கள். நீங்கள் சரியான இடத்தில்தான் இருக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையில் தேவன் அதிசயமான கிரியைகளைச் செய்து கொண்டு வருகிறார் என்று நினைவில் கொள்ளுங்கள்.

தேவனது தலையீட்டால் நம் எதிரிகள் பின்னிட்டு போய்விட்டார்கள். தாவீதும் அவன் மனுஷரும் அவர்களை எதிர்த்த அனைவரையும், விக்ரகங்களையும் சுட்டெரித்தார்கள்; அனைத்தையும் சாம்பலாக்கி விட்டார்கள்.

*******


## உடனடி தேவை

**நெகேமியா வேதாகமக் கல்லூரி**

தேவ ஊழியத்திற்கு ஒரு வருட பயிற்சி பெற ஆட்கள் தேவை.

1. மாலைநேர தமிழ் கல்லூரிகளில் படிக்க ஆண்கள்/பெண்கள்
2. தங்கிப் படிக்க இந்தி தெரிந்த ஆண்கள் தேவை.

தொடர்புக்கு 98412 71858

– ஆசிரியர்



## We're HIRING

Qualified, Expeienced & Mission Minded Candidates for

Medavakkam

ST. PAUL'S MATRICULATION SCHOOL :

❖ PRINCIPAL

❖ TEACHERS (Social Science, KG etc.,)

for Head Office @ CHEPAUK :

❖ DTP OPERATORS

❖ COMPUTER OPERATORS (with Typing)

❖ DRIVERS

E.mail : samselvaraj333@gmail.com

✆ 97908 05460 / 044- 2852 8282


# உத்தமனுக்குக் கர்த்தர் துணை ! (2 நாளாகமம் 19:11)

**(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் சபைக்கு அளித்த செய்தி)**

வாழ்க்கையில் உண்மை நெறிமுறைகளைத் தவறாமல் கடைப்பிடித்து வாழ்கிற மக்களுக்கு அதன் பலன் அவ்வப்போது தெரிவதில்லை. சில நேரங்களில், பொய்யிலேயே வாழ்க்கை நடத்தி, மாய்மாலமான வாழ்க்கை வாழ்கிற மக்கள் அமோக செழிப்பையும், வெற்றியையும் அனுபவிக்கும்போது, “நான் உண்மையாய் வாழ்ந்து, செம்மையாய் நடந்து என்ன பயன் ?” என்று கேட்கத்தான் தோன்றும். ஆனால், காலப்போக்கில் உண்மையான வாழ்க்கை நடத்துகிறவர்கள், அபரிமிதமான தெய்வீக ஒத்தாசைகளைப் பெற்றுக் கொள்வர். **“உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்...”** (நீதிமொழிகள் 28:20).

1. அவர்கள் விண்ணப்பங்களை ஆண்டவர் உடனே கேட்பார்.
2. அவர்களுடைய விண்ணப்பங்களை ஆண்டவர் அங்கீகரிப்பார்.
3. அவர்களுடைய ஆபத்தில் உதவி செய்ய பரலோகமும், தேவ தூதர்களும் எப்போதும் ஆயத்தமாயிருப்பார்கள்.

2 இராஜாக்கள் 18:3,5–7 வசனங்களில் எசேக்கியா என்னும் இராஜா கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். **“அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை. அவன் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான். ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார்; அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அநுகூலமாயிற்று...”** என்று வேதம் சொல்லுகிறது.

2 இராஜாக்கள் 20–ம் அதிகாரம் முதல் பகுதியில் அந்த இராஜா வியாதிப்பட்டு மரணப் படுக்கையில் இருந்தான். அப்பொழுது அவன் சுவர்ப்புறமாக தன் முகத்தைத் திருப்பிக் கொண்டு, **“ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்...”** (2 இராஜாக்கள் 20:3) என்று ஜெபித்தான்.

இங்கே கவனியுங்கள். இந்த இராஜா தன்னுடைய உண்மையை ஆண்டவரிடம் எடுத்துச் சொல்லும் அளவுக்கு அவன் ஆண்டவருடைய பார்வையில் உண்மையாயும், செம்மையாயும் தன் கடமைகளை நிறைவேற்றியிருந்தான்.

**நடந்தது என்ன ?**

உண்மையுள்ள அந்த மனிதனுடைய ஜெபத்தை ஆண்டவர் அங்கீகரித்தார். அவனுடைய ஜெபத்திற்கு உடனடியாகச் செவிசாய்த்து ஆண்டவர் கேட்டார். மட்டுமின்றி, அவனுடைய ஜெபத்திற்குப் பதிலளித்து அவனைக் காப்பாற்ற பரலோகமும், தேவ தூதர்களும் ஆயத்த நிலையிலிருந்தனர். ஆண்டவர் அவனுக்கு 15 வருட ஆயுசைக் கூட்டிக் கொடுத்தார். **“உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்...”** (2 இராஜாக்கள் 20:6).

ஆரம்பக் காலங்களில் நமது பத்திரிகைகளை ஒரு கிறிஸ்தவ அச்சகத்தில் அச்சிட்டுக் கொண்டிருந்தோம். அப்பொழுது, அதன் மேலாளராக இருந்த சகோதரர், “ஐயா, உலக மக்களுக்கு ஒரு வேலையைச் செய்து கொடுத்தால் என்றைக்காவது ஒரு நாள் அதன் கிரயத்தைக் கொடுத்து விடுவார்கள். ஆனால் தேவ ஊழியர்கள் சிலரிடம் எங்கள் பணம் சிக்கிக் கொண்டால் அது வரவே வராது. வசூலிப்பதும் மிகவும் கஷ்டம். பணம் கையில் வந்தாலும் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுக்க விருப்பமற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் எப்படித்தான் தேவஊழியம் செய்கிறார்களோ, புரியவில்லை” என்றார்.

உண்மைக்கும், உத்தமத்திற்கும் மிக நெருங்கிய உறவு உண்டு. உத்தம வாழ்க்கை இல்லாத எந்த ஒரு தேவனுடைய பிள்ளையும், ஊழியக்காரரும் மேன்மையை சுதந்தரிக்க முடியாது ... **“...உத்தமனுக்குக் கர்த்தர் துணை”** (2 நாளாகமம் 19:11). உத்தமன் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான் (சங்கீதம் 15:1,2).

தொடர்ச்சி 8–ம் பக்கம்.....

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

| | | |
|---|---|---|
| 1. ஜெப உதவி | – | 24 மணி நேரம் |
| 2. அழைப்பின் எதிரொலி | – | பத்திரிகைகள் (16 மொழிகள்) |

தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.

| | | |
|---|---|---|
| 3. வேதாகமக் கடித முறைக் கல்வி | – | தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | | |
| 5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – | (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்) |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | | |
| 7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள் | | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | | |
| 9. கைப்பிரதி வினியோகம் | – | தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – | சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | – | கிராம ஆங்கிலப் பள்ளி |
| 12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) | – | ஞாயிறு காலை 10.30 மணி |
| & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) | | மாலை 3.00 மணி |
| 13. அதிகாலை ஆராதனை | – | ஞாயிறு காலை 5.30 மணி |
| 14. ஆயத்தக் கூட்டம் | – | ஞாயிறு காலை 8.00 மணி |
| 15. தமிழ் ஆரதனைகள் | – | ஞாயிறு காலை 8.30 மணி |
| 16. வாலிபர் கூட்டம் | – | ஞாயிறு காலை 11.00 மணி |
| 17. ஐக்கிய உணவு | – | ஞாயிறு மதியம் 1.00 மணி |
| 18. இந்தி ஆராதனை | – | ஞாயிறு மாலை 4.00 மணி |
| 19. தெலுங்கு ஆராதனை | – | ஞாயிறு மாலை 5.00 மணி |
| 20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை | – | ஞாயிறு மாலை 6.00 மணி |
| 21. கருத்து நேரம் | – | ஞாயிறு இரவு 7.00 மணி |
| 22. பெண்கள் ஆராதனை | – | புதன் மாலை 5.30 மணி |
| 23. ஆண்கள் ஆராதனை | – | வெள்ளி இரவு 7.00 மணி |
| 24. சீஷத்துவக் கூட்டம் | – | சனி மாலை 6.00 மணி |
| 25. வீட்டுக் கூட்டங்கள் | – | செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 26. விசேஷ திருவிருந்து | – | பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 27. ஊழியர்கள் கூடுகை | – | முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி |
| 28. பெற்றோர் ஜெபம் | – | முதல் ஞாயிறு மாலை 4.00 மணி |
| 29. இரவு ஜெபம் | – | 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 30. உபவாச ஜெபம் | – | இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 31. திருவிருந்து | – | 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் | – | தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்) |
| 33. பணியாளர் ஜெபம் | – | தினமும் காலை 9.00 மணி |
| 34. அலுவலகம் | – | தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.




"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# குழியிலிருந்து அரண்மனைக்கு!

**வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)**

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

**கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து ... சோர்ந்துபோகார்கள். – ஏசாயா 40:31.**

1972ஆம் ஆண்டு, நான் இளைஞனாயிருந்தபொழுது சென்னையிலுள்ள சைதாப்பேட்டையில் ஒரு விசேஷக் கூட்டம் நடத்த வேண்டுமென்று ஆவியானவராலே உணர்த்தப்பட்டேன். சுவரொட்டிகள், கைப்பிரதிகள் முதலானவை மூலம் அக்கூட்டத்தை விளம்பரப்படுத்தி, மக்கள் அனைவரையும் கூட்டத்திற்கு அழைத்தோம். நானும் என்னுடன் இருந்தவர்களும் பலரை அக்கூட்டத்திற்குக் கொண்டுவர பிரயாசப்பட்டோம்.

இந்நிகழ்ச்சிக்காக அதிகமான ஜெபங்களும் ஏறெடுக்கப்பட்டிருந்தன. எனது நண்பர்களில் சிலர் வாத்தியக் கருவிகளையும், பாட்டுத் தாள்களையும் கொண்டு வந்தனர். ஆனால் கூட்டம் ஆரம்பிக்கும் வேளையில் மக்கள் ஒருவரையுமே அவ்விடத்தில் காணவில்லை. நாங்களோ கூட்டம் வரும் என்று அதிக நேரம் காத்திருந்தோம். இறுதியாக கூட்டத்தில் பங்குபெற இரண்டு நபர்கள் வந்தனர். என்னோடு உழைத்த என் நண்பர்கள் சோர்ந்துபோய் விட்டனர். ஏன் தேவன் நமது உண்மையான ஜெபங்களுக்கும், கடின உழைப்பிற்கும் பதில் தரவில்லை என்று என்னிடம் கேட்டனர். தேவன் தமது பதிலைத் தமது வழியில் சொல்வார் என்றேன். நான் என் நம்பிக்கையை இழக்கவில்லை. நான் கர்த்தருக்குள்ளே என்னைத் திடப்படுத்திக் கொண்டேன் (1 சாமுவேல் 30: 6).

பின்பு, பாடல் ஆராதனை நடந்தது. அதன்பின், நான் ஒரு வல்லமையான செய்தி கொடுத்தேன். கூட்டத்திற்கு வந்திருந்த இருவரில் ஒருவர் தன் வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தார். பின்பு அவர் என்னோடு இணைந்து கர்த்தருக்கு ஊழியம் செய்ய ஒப்புக் கொடுத்தார்.

இப்பொழுதோ பல்லாயிரம் மக்கள் முன்பு இந்தியாவிலும், வெளிநாடுகளிலும், பிரசங்கிக்க என்னைக் கர்த்தர் உயர்த்தி உள்ளார். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டு வருகிறது. இதற்காக நான் பல வருடங்கள், அதிக பொறுமையுடனும், விசுவாசத்துடனும் காத்திருக்க வேண்டியதாயிருந்தது.

பிரியமான சகோதர, சகோதரிகளே, 'தோல்வி' எனும் படகில் பயணம் செய்கின்றீர்களா? உங்களது எல்லாக் கடின உழைப்புகளும், உபவாச ஜெபங்களும் நல்ல கனிகளைக் கொடுக்கவில்லையா? சில நேரங்களில், நாம் தேவனிடத்திலிருந்து பெரியக் காரியங்களை உடனடியாக எதிர்பார்க்கும்பொழுது தேவன் அமைதியாக இருக்கிறார். ஏனென்றால் அவர் நமது விசுவாசத்தையும் பொறுமையையும் சோதிக்க விரும்புகிறார்.

**அழிந்துபோகிற பொன் அக்கினியினால் சோதிக்கப்படும்: அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.** (1 பேதுரு 1: 7).

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*******

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

**"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது..."** (2 நாளாகமம் 16:9). உத்தமமான ஜனம் கர்த்தருக்குத் தேவை (லூக்கா 1:17). **"...உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்"** (நீதிமொழிகள் 2:7). **"...நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்..."** (ஆதியாகமம் 6:9). **"...நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு"** (ஆதியாகமம் 17:1). **"கர்த்தர் சாத்தானை நோக்கி: என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல, பூமியில் ஒருவனும் இல்லை என்றார்"** (யோபு 1:8). **"அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்"** (யோபு 2:9). **"உத்தமமாய் என்னைப் பின்பற்றின... காலேபும்... யோசுவாவும்..."** (எண்ணாகமம் 32:11). **"நீர் என் உத்தமத்திலே என்னைத் தாங்கி, என்றென்றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர்"** (சங்கீதம் 41:12). **"விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு..."** (1 தீமோத்தேயு 1:2).

முதலாவதாக, நோவாவைக் குறித்துப் பார்க்கும்போது, தேவன் நோவாவை தனியாகக் கண்ணுற்றார். 'ஆண்டவரே, என்னை நீர் தனியாகப் பார்க்கிறதற்காக ஸ்தோத்திரம்' என்று கூறும் நிலையில் நாமிருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் தனித்தனி அபிஷேகம், தனித்தனி தாலந்துகள், தனித்தனி குரல்கள், கிருபைகள், வாய்ப்புகள் அளித்து ஒவ்வொருவரையும் தனிப்பட்ட விதத்தில் ஆண்டவர் பார்க்கிறார். நான் என்னுடைய அறையிலே தனியாக இருக்கும்போது, 'ஆண்டவரே, நீர் என்னோடு இருப்பதற்காக ஸ்தோத்திரம். நீர் என்னோடு கூட இருந்திராவிடில் இவ்வளவு காரியங்களையும் நான் நிச்சயமாக செய்திருக்க முடியாது' என்று ஆண்டவரிடம் கூறுவேன். அவருடைய தெய்வீக வல்லமையும், அபிஷேகமும் நம்மோடிருப்பதால் நம்மால் அனைத்து காரியங்களையும் வெகு சிறப்புடன் செய்யமுடிகிறது. நமக்கு சுகம்

கிடைக்கின்றது. நோவாவை ஆண்டவர் நீதிமான் என்று கண்டார். நீதிமானாய் வாழ்கின்றதினாலே நமக்கு தேவனோடுகூட சஞ்சரிக்கும் ஆசீர்வாதம் கிடைக்கின்றது.

நம் வாழ்க்கைப்பாதையிலே நாம் பொருளாசையில்லாதவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகவும் இருந்தால் தேவன் நம்மோடுகூட நடப்பார். நம் சிநேகிதர்கள், உறவினர்கள் நம்மோடு இல்லாத தனிப்பட்ட நேரங்களிலேயும் தேவனுடைய உறவை நாம் அனுபவிக்க முடியும்.

**இரண்டாவதாக**, நோவாவை அழைத்து ஒரு பேழையை உண்டுபண்ணும்படியாக அவனிடம் பேசினார். 'ஆண்டவர் என்னிடம் தனியாகப் பேசட்டும், பின்னர் நான் செய்யவேண்டிய காரியங்களைச் செய்வேன்' என்று அநேகர் கூறுவார்கள். ஆண்டவர் பேச வேண்டுமானால் நம் செவிகள் கூர்மையாகவும், இருதயமான பாத்திரம் நேர்மையாகவும், சரியாகவும் இருக்க வேண்டும். நாம் நம்மை சரியான விதத்தில் மாற்றிக் கொள்ளாமல், உலகத்தோடு ஒட்டி உலகத்தின் அருவருப்பான, தீமையான, வஞ்சகமான காரியங்கள், கேடுபாடு நிறைந்த மனசாட்சியோடு கூட வாழும்போது தேவன் தம்முடைய அபிஷேகத்தை நம்முடைய சரீரத்தில் ஊற்றுகிறதில்லை. நாம் தேவனுடைய பிள்ளைகளாக வாழ்ந்தால் தேவ சத்தம் கேட்க முடியும். தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக, உண்மையுள்ளவர்களாக வாழ்ந்தால் நம்முடைய வியாதிகள், துன்பங்கள், கஷ்டங்கள் எல்லாவற்றையும் நீக்கி அவருடைய சத்தத்தைக் கேட்கும்படி அநுக்கிரகம் செய்வார்.

இச்செய்தியை எழுதுகிற நான் ஆண்டவருடைய சத்தத்தை மூன்று முறை மிகத் தெளிவாக, துல்லியமாகக் கேட்டிருக்கிறேன். அந்த சத்தம் மிகவும் இனிமையானது. ஒரு முறை என்னை பெயர் சொல்லி அழைத்த நிலைமை. 2 –ஆம் முறை என்னை ஊழியத்திற்கு முழுமையாக அழைத்த தன்மை. இன்னொரு முறை நான் வியாதியாய்ப் படுத்திருந்தபோது ஆண்டவர் எனக்குக் கொடுத்த வார்த்தை. இந்த அனுபவங்களைப் பெறுவதும், காப்பாற்றுவதும் எளிதானவையல்ல.

அருமையான தேவ பிள்ளைகளே, நீங்கள் செய்கின்ற நல்ல காரியங்களையும், தர்மங்களையும் மறந்து விடுவதற்கு அவர் அநீதியுள்ள தேவன் அல்ல (எபிரெயர் 6:10) என்று வேதம் கூறுகின்றது. அவர் நீதியுள்ள தேவன். நீங்கள் செய்கின்ற எல்லா நல்ல காரியத்திற்கும் அவர் பதிலளிக்க வல்லவர். நீங்கள் கர்த்தருடையப் பார்வையிலே நீதிமான்களாய் இருப்பதின் மூலம், தேவனோடு கூட நடக்கலாம். தேவனுடைய சத்தத்தைக் கேட்கலாம். அது மாத்திரமல்ல அவருடைய சித்தத்தைச் செய்யக்கூடிய ஒரு விசேஷித்த கிருபையை அவர் அருளுவார்.

நம்மை எந்த அளவிற்கு ஆண்டவரிடத்திலே விட்டுக் கொடுக்கின்றோமோ அந்த அளவிற்கு ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்க முடியும். தேவ சத்தத்தை நாம் கேட்க முடியும்.

**மூன்றாவதாக**, நோவா தேவனிடத்திலிருந்து ஒரு வேலையையும் பெற்றுக் கொள்கிறார். ஆண்டவரிடத்திலே வேலையைப் பெற்றுக் கொள்ளாத ஊழியக்காரர்கள் இருக்கவே கூடாது. தேவனுக்கு ஒரு மனிதன் தன்னை அர்ப்பணிக்கும்போது தேவன் அவனோடு நடக்கின்றார், பேசுகின்றார், தமது சித்தத்தை செய்வதற்கான ஒரு விசேஷித்த வேலையைக் கொடுக்கின்றார். நாம் அநேக நேரங்களிலே தேவனுடைய ஊழியத்தைத் திறமையாக, ஒழுங்காக செய்ய முடியாமல் இருப்பதற்குக் காரணம் தேவ கிருபையிலே நாம் இல்லை, தேவ அன்பிலே நாம் இல்லை. நாம் சுயமாக தேவனுடைய காரியங்களைச் செய்யும்போது நமக்குத் தோல்விகள் உண்டாகும். ஆனால் தேவ சித்தத்திற்கு உட்பட்டு காரியங்களைச் செய்யும்போது ஒரு அபரிமிதமான வல்லமை நமக்கு உண்டாகிறது.

**நான்காவதாக**, நமக்கு ஒரு தகுதியையும் கொடுக்கிறார், திறமையையும் கொடுக்கிறார். வேலையைக் கொடுக்கிறவர் அதற்கான நல்ல கூலிகளையும் கொடுப்பார். சில நேரங்களில், “என் மகன் ஊழியத்திற்குப் போய்விட்டான். எப்படிப் பிழைக்கப்போகிறான் என்று தெரியவில்லை” என்று சில ஊழியர்களுடைய பெற்றோர்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். ஊழியம் செய்கிறவர்கள்தான் இந்த உலகத்திலே உயர்ந்தவர்கள், செல்வந்தர்கள். ஊழியம் செய்கிறவர்களை ஆண்டவர் ஆசீர்வதிக்க விரும்புகிறார்.

ஆண்டவர் இட்ட கட்டளையை நோவா சரியாக செய்து முடித்தார்.

அநேக நேரங்களிலே தேவன் கொடுக்கின்ற திட்டங்கள் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதவைகளாக இருக்கலாம். தேவன் நம்மை ஒரு தாழ்வான இடத்தில் வைக்கும்போது, கொஞ்சம் நம்முடைய அந்தஸ்தை குறைவாக வைக்கும்பொழுது நாம் ஆண்டவரிடத்தில் முறுமுறுக்கிறோமா ? அது கூடாது. ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட வேலையை வைத்திருக்கின்றார். அது எதுவாக இருந்தாலும் அப்படியே அதை செய்ய வேண்டும்.

கடைசியாக, வேதம் கூறுகிறது, “**நோவா... தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்**” (ஆதியாகமம் 6:22). தேவன் ஆரம்பித்த வேலையை சரியாய் முடிப்பார். உங்கள் வாழ்க்கையிலே அவர் ஆரம்பித்த வேலையை அவர் முற்றும் முடியச் செய்வார். உங்களை என்ன நோக்கத்தோடு அழைத்தாரோ அந்த நோக்கத்தை நிச்சயமாய் நிறைவேற்றுவார். நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், **தேவனுக்குப் பயப்படுகிறவர்களாய் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். தேவனுடைய பார்வையிலே உண்மையுள்ளவர்களாய் இருங்கள்.** பொய் சொல்லக் கூடாது. அநேகர் உண்மையைச் சொல்ல விரும்புவார்கள், ஆனால் அதற்கு முன்னதாக ஒரு பொய் அவர்கள் வாயினின்று வெளிப்படும். **பொய் சொல்கிறவர்களை ஆண்டவர் பயன்படுத்துவது இல்லை.** மேலும் பொருளாசை இல்லாதவர்களாய், அதனை வெறுக்கிறவர்களாய் உங்களை மாற்றிக் கொள்ளுங்கள்.

“உத்தமனுக்குக் கர்த்தர் துணை” (2 நாளாகமம் 19:11).

*******

## அன்பான வாசகர்களின் கவனத்திற்கு . . .

### போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதை

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதையை புத்தக வடிவில் முடிப்பதற்கான நிறைவுக் கட்டத்தில் இருக்கிறோம். **நமது போதகரின் ஊழியத்தின் மூலம் நீங்கள் பெற்ற நன்மைகளை 10 வரிகளில் சாட்சியாக எழுதி அனுப்பவும்.** கூடுதலாக தங்கள் புகைப்படத்தை அனுப்பினால் அதனை சுயசரிதை புத்தகத்தில் சேர்த்து வெளியிட உதவியாக இருக்கும்.

– ஆசிரியர்

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

### YouTube (யூடியூப்)

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | S. Sam Selva Raj |
| A/C No. | : | 1023 2934 679 |
| IFSC | : | SBIN 00 00 249 |
| SWIFT CODE | : | SBI NIN BB 455 |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | Anna Salai, Chennai-6 |
| Name | : | Echo of His Call |
| A/C No. | : | 6038 0502 2319 |
| IFSC | : | ICIC 000 6038 |

### *3. Bank : State Bank of India*

(This Account is for Tax Exemption for Indians only )

| | | |
|---|---|---|
| Branch | : | Triplicane, Chennai-5 |
| Name | : | Echo of His Call Educational Trust |
| A/C No. | : | 1023 2923 805 |
| IFSC | : | SBIN 00 00 249 |

Google Pay: 98410 71858
PayPal : SAM SELVA RAJ

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**✻ வருட சந்தா ரூ. 100/–** **✻ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/24-26
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 29th JULY 2024
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**